<u>செய்தி குறிப்பு</u>

நாடாளுமன்ற உறுப்பினர் திரு.R.S.பாரதி மற்றும் அறப்போர் இயக்கத்தைச் சேர்ந்த திரு.ஜெயராம் வெங்கடேசன் இருவரும் முன்னாள் உள்ளாட்சி துறை அமைச்சர் திரு.S.P.வேலுமணி தனது துறையின் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோருவதில் முறைகேடு செய்து அரசின் நிதியை கையாடல் செய்ததாக கொடுத்த மனுக்களின் அடிப்படையில் முதல் கட்ட விசாரணை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு விசாரணை அறிக்கை தமிழக அரசிற்கும் மாண்புமிகு உயர் நீதிமன்றத்திற்கும் அனுப்பிவைக்கப்பட்டது. விசாரணை அறிக்கையை பரிசீலனை செய்த மாண்புமிகு உயர் நீதிமன்றம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு புகார் மனுவில் கூறப்பட்டுள்ள முறைகேடுகள் தொடர்பாக அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு ஆழமாக விசாரிக்குமாறும், தலைமை கணக்காயர் அவர்களின் அறிக்கையின் அடிப்படையில் விசாரணை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தியது. அதன் அடிப்படையில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவினால் தொடர் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணையில் மனுக்களில் தெரிவித்துள்ள குற்றசாட்டுகள் தொடர்பாக அடிப்படை முகாந்திரம் இருப்பதால் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவின் தலைமையக குற்ற எண் 16/2021 ச.பி. 120(B) r/w 420 IPC, 409 IPC மற்றும் பிரிவு 13(2) r/w 13 (1) (c) & 13 (1) (d) of the Prevention of Corruption Act, 1988 r/w 109 IPC என்ற வழக்கு முன்னாள் உள்ளாட்சி துறை அமைச்சர் திரு.S.P.வேலுமணி மற்றும் 16 தனிநபர்கள்/ நிறுவனங்கள், சென்னை, கோயம்புத்தூர் மாநகராட்சியை சேர்ந்த அதிகாரிகள் மற்றும் சிலர் மீது உள்ளாட்சி துறை தொடர்பான பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோருதலில் முறைகேடுகளில் ஈடுபட்டு அரசு நிதியை கையாடல் செய்துள்ளதாக பதிவுசெய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

விசாரணையின் தொடர்ச்சியாக இன்று 10.08.2021-ம் தேதி மேற்கண்ட குற்றச்சாட்டுகளில் தொடர்புடயவர்களாக கருதப்படும் திரு.S.P.வேலுமணி, அவரது உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரது இல்லங்கள், அலுவலகங்கள், நிறுவனங்கள் மற்றும் பண்ணை வீடுகள் ஆகிய இடங்களிலும் சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சி அதிகாரிகளின் இல்லங்களிலும் மொத்தம் 60 இடங்களில் (சென்னை-15, காஞ்சிபுரம்-1, திண்டுக்கல்-1, கோயம்புத்தூர்-42) சோதனை மேற்கொள்ளப்பட்டது. சோதனையில் பணம் ரூபாய் 13,08,500/- மற்றும் குற்றச்சாட்டு தொடர்புடைய ஆவணங்கள், நிறுவனங்களின் பரிவர்த்தனைகள், ரூபாய் 2 கோடி வரையிலான வைப்புத்தொகை ஆவணங்கள், மாநகராட்சி சம்மந்தப்பட்ட ஆவணங்கள், பதிவேடுகள், Computer Hard Disk மற்றும் வழக்கிற்கு தொடர்புடைய பல முக்கிய ஆவணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. வழக்கு தொடர்ந்து விசாரணையில் உள்ளது.

Scanned with CamScanner